# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : O.S.No. 228/ 2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : D.W. 2 |
| Name | : ராசு |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.02.2025.

-----

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் 3ம் தரப்பினர். பி.வா.சா.2 ஆக சாட்சியம் அளிக்கிறேன். எனது முதல் விசாரணைக்காக நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

ஆவணங்கள் இல்லை.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் கட்டகருப்பன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு தற்போது 81 வயது ஆகிறது. நான் கொத்தனார் வேலையும், விவசாயமும் செய்து வருகிறேன். எனக்கு 3 ஏக்கர் அளவில் கால்வாய் பாசனமுள்ள தோட்டம் உள்ளது. தாவா சொத்திற்கு அருகே எனக்கு ஒரு குண்டு நிலம் உள்ளது. சர்வே எண் தெரியாது. தாவா சொத்துக்கள் அனைத்தும் பொன்னையாத்தேவருக்கும், அவரது மனைவி கருத்தம்மாளுக்கும் கிரைய பாத்தியப்பட்ட சொத்து என்று எனக்கு தெரியும். தாவா சொத்தின் விஸ்தீரணம் பற்றி தெரியாது. பொன்னையாத்தேவருக்கும், அவரது மனைவி கருத்தம்மாளுக்கும் எவ்வளவு நிலம் விஸ்தீரணம் உள்ளது என்று எனக்கு தெரியாது, எனது சொத்திற்கு அருகில் அவர்களது சொத்து உள்ளது. எனது சொத்து



அவர்களின் சொத்திற்கு கிழக்கேயுள்ளது. எத்தனை சர்வே எண்ணிற்கு மேற்படியார்களுக்கு சொத்து உள்ளது என்று எனக்கு தெரியாது. நான் எனது தோட்டத்தில் நெல் விவசாயம் செய்து வருகிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் பற்றி தெரியுமா என்றால் அரைகுறையாகத் தான் தெரியும். என்னை சாட்சி சொல்ல பொன்னையாத்தேவரின் மகன் வீரணன் இன்று காலை 8.00 மணிக்கு அழைத்து வந்தார். அதற்கு முன்பு சாட்சியம் அளிப்பது சம்மந்தமாக வீரணன் பேசிக்கொள்ளவில்லை. வீரணனுக்கும், அவரது தங்கைக்கும் வழக்கு நடைபெறுவதாக சொன்னார்.

அவரது தங்கையின் பெயர் பொய்யாமொழி மனைவி ஆவார். பெயர் ஞாபகமில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி மற்றும் பிரதிவாதிக்கு இடையே பஞ்சாயத்து எதுவும் நடைபெறவில்லை. பொன்னையத்தேவரை எனக்கு சிறுவயது முதலே தெரியும். பொன்னையாத்தேவர் இறந்து சுமார் 25 ஆண்டுகள் மேலாகிறது. பொன்னையத்தேவர் மனைவி கருத்தம்மாள் தற்போது உயிருடன் இல்லை, அவர் இறந்து சுமார் 6 வருடங்கள் ஆகிறது. தாவா சொத்துக்களை பொருத்து பொன்னையாத்தேவரோ, அவரது மனைவியோ எழுத்துமூலமாக எழுதி பிள்ளைகள் யாருக்காவது பாத்தியப்படுத்தினாரா என்றால் இல்லை, அவரது மகனிடம் ஒப்படைத்துவிட்டனர். மேற்படி ஒப்படைத்த சங்கதி எனக்கு நேரடியாக தெரியாது. சொல்லித்தான் தெரியும். பொன்னையாத்தேவரோ, அவரது மனைவியோ சொத்துக்களை ஒப்படைத்துவிட்டதாக பொன்னையாத்தேவர் என்னிடம் சொல்லி எனக்கு தெரியும். பொன்னையாத்தேவர் உயிருடன் இருக்கும்போது வீரணன் பெயரில் சொத்துக்களை பட்டா பெயர் மாற்றம் செய்து ஒப்படைவு செய்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஒப்படைப்பு செய்ததது தெரியும். பொன்னையாத்தேவர் பெயரிலிருந்து வீரணன் பெயருக்கு எப்போதிலிருந்து பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் யார் யார் பெயரில் பட்டா உள்ளது என்று எனக்கு தெரியாது. நான் கொத்தனார் வேலை செய்து வருவதால் எனக்கு சொத்தின் அனுபவம் குறித்து தெரிய வாய்ப்பில்லை என்றாலும், வழக்கு சொத்தின் அருகில் எனக்கு நிலங்கள் எதுவும் கிடையாது என்றும், நான கஷ்ட ஜீவனம் செய்து வருவதால் வீரணனிடம் பணம் பெற்றுக்கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

ஓம் / R.S. ரஸ்கின் ராஜ்,
சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.